

திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் மத்திய மற்றும் வடக்கு மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி,வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்எல்ஏ, மாநகர செயலாளரும், மாநகராட்சி மேயருமான அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், ஸ்டாலின் குமார், கதிரவன், பழனியாண்டி, தொகுதி பொறுப்பாளர்கள் எம்.பி. ராமலிங்கம் எம்.எல்.ஏ., கோவி செழியன்அவைத் தலைவர்கள் பேரூர் தர்மலிங்கம், அம்பிகாபதி மாவட்ட ஊராட்சித் தலைவர் தர்மன் ராஜேந்திரன், மாவட்டத் துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ் கருணாநிதி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாநில மாணவரணி செயலாளர் பி.எம். ஆனந்த், டோல்கேட் சுப்பிரமணி உட்பட மத்திய மற்றும் வடக்கு மாவட்ட மாநகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரி மாவட்டத்தில்

# மின்சாரம் தாக்கி உயிரிழந்த குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக். 6 -**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்து நிதியுதவியும் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டம், ஆற்றூர் கிராமம், தோப்புவிளையில் வசித்து வரும் டெம்போ ஓட்டுநர் சோமராஜ் என்பவரது மனைவி திருமதி.சித்ரா (வயது 47), மகள் திருமதி.ஆதிரா (வயது 23) மற்றும் மகன் செல்வன். அஸ்வின் (வயது 19) ஆகிய மூவரும் 3.10.2023 அன்று அவர்களது வீட்டில் எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

தனது குடும்பத்தினரை இழந்து வாடும் சோம்ராஜ் மற்றும் அவரது உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து வரவேற்புரை!

# புதுக்கோட்டை வடக்கில் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரை!

புதுக்கோட்டை, அக். 6 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழகத் தலைவர் தளபதி அவர்களிடம் சிறந்த பேரூர் கழகச் செயலாளர் விருது பெற்ற இலுப்பூர் பேரூர் கழகச் செயலாளர் வை.விஜயகுமார் அவர்களுக்கு பாராட்டுவிழா மாபெரும் பொதுக்கூட்டம் 30.09.2023 சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் கண்ணார்தெரு, பேருந்து நிலையம் எதிரில் இலுப்பூரில், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

அன்னவாசல் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர். ஆர்.எஸ்.மாரிமுத்து வரவேற்புரையாற்றினார்.

கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர்.எஸ்.பாரதி, புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு பேசியதாவது:

சட்டத்துறை அமைச்சர் ரகுபதியை, முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் கேவலமாக பேசியுள்ளார். அந்த ரகுபதிதான் விஜய பாஸ்கரை ஜெயலலிதா விடம் அறிமுகப்படுத்தியவர். யார் அறிமுகப்படுத்தினார்களோ அவருக்கு துரோகம் செய்தவர் யாரும் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை. அது விஜய பாஸ்கருக்கு மட்டுமல்ல அவர் இருக்கும் கட்சியும் அப்படிப்பட்ட கட்சி தான். எடப்பாடி பழனிச்சாமி சசிகலாவின் காலில் விழுந்து முதலமைச்சராகி ஒரு மாத காலத்திற்குள் அவரை எதிர்த்துப் பேசியுள்ளார்.

அமைச்சர் ரகுபதி பற்றி பேசுவதற்கு விஜய பாஸ்கருக்கு எந்த அருகதையும் இல்லை. தி.மு.க. காரன் பேச ஆரம்பித்தால் விஜய பாஸ்கர் தாங்க மாட்டார். பழைய தி.மு.க. காரன் போல் களத்தில் இறங்கினால் அ.தி.மு.க. காரன் ஒருவன் கூட இருக்க முடியாது. 1984ஆம் ஆண்டு அண்ணா பிறந்தநாள் விழாவில் தி.மு.க.வை அழித்து விடுவேன், தடை செய்து விடுவேன் என்று எம்.ஜி.ஆர். பேசினார்.

இதற்கு மற்றொரு கூட்டத்தில் பதிலளித்து கலைஞர் கருணாநிதி பேசும் போது, எவன்டா அவன் தி.மு.க.வை அழிக்கிறவன் என கர்ச்சித்தார். எம்.ஜி. ஆர். அந்த மேடையில் பேசியது தான் கடைசி வார்த்தை. அதற்குப் பிறகு பேசாமலேயே போய் சேர்ந்து விட்டார். இதை விஜயபாஸ்கர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

திமுக ஒரு மோசமான கட்சி. யாராவது துரோகம் செய்தால் கை கால்கள் விளங்காமல் போய்விடும், கட்சியை திட்டினால் உருப்படாமல் போய்விடுவான். கால் போய்விடும், உலறுவாயா ஆகிவிடுவான், இப்படி பல பேர் உள்ளார்கள். விஜய பாஸ்கர் சின்ன பையன் நல்லா இருக்க வேண்டும். இதுவே கடைசியாக இருக்கட்டும். கொடை வள்ளல் என போற்றப்பட்ட எம். ஜி.ஆர். தி.மு.க.வை ஒழிக்க வேண்டும் என சொன்ன பிறகு பேச முடியாமல் போய் சேர்ந்தார் என்பது வரலாறு. திமுகவை பற்றி பேசும்பொழுது சற்று யோசனை செய்து பேச வேண்டும். விஜயபாஸ்கர் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தபோது அவரை ஆளாக்கியது ஜெயலலிதா. ஜெயலலிதா இல்லையென்றால் விஜயபாஸ்கர் எங்காவது ஒரு அரசு மருத்துவமனையில் மருத்துவராக இருந்திருப்பார். ஒரு கோலத்தால் ஜெயலலிதாவுடன் நெருக்கமாகி, சட்டமன்றத்திலே கலைஞரை தள்ளுவண்டி என மிக கேவலமாக பேசினார். இதை ஜெயலலிதா பார்த்து சிரித்தார். ஆனால் தள்ளு வண்டியில் வந்தவர் ரொம்ப நாட்கள் வாழ்ந்தார், சிரித்தவர்கள் என்ன ஆனார்கள் என்பது மக்களுக்கு தெரியும். சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கரால் ஜெயலலிதாவின் உயிரை காப்பாற்ற முடிந்ததா எனவும் கேள்வி எழுப்பினார். விஜயபாஸ்கரும் சசிகலாவும் தான் ஜெயலலிதாவை சாகடித்தார்கள் என்பதை பகிரங்கமாக தெரிவிக்கிறேன்.

ஜெயலலிதா நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு இட்லி தோசை சாப்பிட்ட கூட்டம் தான் விஜய பாஸ்கர் கூட்டம் என ஆறுமுக சாமி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. விஜயபாஸ்கர் மட்டுமல்ல, அவரோடு யார் யார் கொள்ளையடித்தார்களோ எடப்பாடி, தங்கமணி, வேலுமணி என எல்லா மணிகளும் ஒரு மாத காலத்திற்குள்ளாக நீதிமன்ற படுக்கட்டுகளில் ஏற உள்ளார்கள்.

நாட்டில் இன்னும் சிலர் எம்ஜிஆர் இருப்பதாக நினைத்துக் கொள்கிறார்கள். அவருக்காக ஓட்டு போடுகிறார்கள். ஆனால் இன்றைக்கு இலவச பேருந்து திட்டம், மகளிர் உரிமைத்தொகை, 12ஆம் வகுப்பு மாணவிகளுக்கு ஆயிரம் ரூபாய் உதவி திட்டம் மூலமாக தளபதி ஸ்டாலின் 10 எம்.ஜி. ஆருக்கு சமமாக உருவாகி விட்டார் என்றார்.

கூட்டத்திற்கு தென்னலூர் எம்.பழனியப்பன், கே.எஸ்.சந்திரன், கே.ஆர். என்.போஸ், எம்.செந்தில் குமார், டி.ஆர்.ஆர்.ரெங்கராஜ், எம்.சிவக்குமார், கா. இளவரசன், பொன்.பாரி வள்ளல், எம்.எஸ்.ஏ. முகம்மது ரிஷா, கை.பழனிச்சாமி, தமிழினியன், எம். செல்லத்துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். அஞ்சுகாமீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன், அரு.வீரமணி, சுப.சரவணன், எம். எஸ்.அசோக்பாண்டியன், ஆ.செந்தில், க.மதியழகன், எஸ்.எஸ்.கருப்பையா,

பெ.ராஜேஸ்வரி, தவ.பாஞ்சாலன், என். சேட்டு, மு.பி.ம. சத்தியசீலன், அ.இளங்குமரன். கே.பி.அய்யப்பன், சி.சண்முகம், ஓ.எஸ்.வெங்கடாசலம், எம்.பரமசிவம், என். சாத்தையா, டாக்டர் சி. குறிஞ்சிவாணன். கே.எஸ்.ச.இளையசூரியன், கவிவேந்தன் , டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், தவசு மணி முருகேசன், சி.அரங்கநாயகம், எஸ். வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, மு.கலைஞர் கருணாநிதி, எம்.ஏ.எம்.இம்தியாஸ், சாங்கிராப்பட்டி ரலி, சுந்தர்ராஜ், பிரேம் ஆனந்த், ஓவியா மற்றும் ஒன்றிய, நகர, பேரூர். கிளை கழக செயலாளர்கள் , நிர்வாகிகள், ஒன்றிய பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில் இலுப்பூர் பேரூராட்சி துணைத் தலைவர் இ.செந்தில்ராஜா நன்றி கூறினார்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயல் வீரர்கள் கூடம் மதுரை தெற்கு மாவட்டம் முத்துப்பன்பட்டி சேடபட்டியார் திடலில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்படி முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, சேலம் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு மற்றும் நாடாளுமன்ற தேர்தல் குறித்து தொகுதி பொறுப்பாளர்கள் சாயல்குடி ராமர், மாரியப்பன் கென்னடி, இலக்குவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்புரையாற்றிய போது எடுத்தபடம். உடன் திரளான கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்



கேரளாவில் நடைபெற்ற தென்னிந்திய அளவிலான பென்காக் சிலாட் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவர்கள் மற்றும் கோவாவில் நடைபெறும் தேசிய விளையாட்டுப் போட்டிக்கு தேர்வாகியுள்ள விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியைச் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றனர். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். இரா. இலட்சுமணன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், ஒன்றிய பொருளாளர் முரளி, தகவல் தொழில்நுட்ப அணி ப. அன்பரசு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில் பட்டாசுக் கடையில் விபத்து!

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.6 -

மயிலாடுதுறை, தில்லையாடி கிராமத்தில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதி உதவி வழங்கி, முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

மயிலாடுதுறை மாவட்டம், பொறையார் காவல் சரகம், தில்லையாடி கிராமத்தில் செயல்பட்டு வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசுக் கடையில் 4.10.2023 அன்று மதியம் வெடிகளை பார்சல் செய்யும்போது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் கிடங்கல் கிராமத்தைச் சேர்ந்த மாணிக்கம், மயிலாடுதுறையைச் சேர்ந்த மதன், மகேஷ் மற்றும் ராகவன் ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன். மேலும், இவ்விபத்தில் காய மடைந்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 4 நபர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### அரியலூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர,பேரூர்

# மாணவரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நேர்காணல்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!

அரியலூர், அக். 6-

அரியலூர் மாவட்டத்தில் தி.மு.க. மாணவர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நேர்காணல் இன்று (06. 10.2023- வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் அரியலூர் புறவழிச் சாலையில் உள்ள வாணி மகாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநில மாணவரணி தலைவர் இரா. ராஜீவ்காந்தி மற்றும் மாநில மாணவரணி செயலாளர் வி.எம். ஆனந்த் கலந்து கொண்டு நேர்காணல் நடத்துகிறார்கள், அது போது ஒன்றிய, நகர, பேரூர் மாணவரணி பொறுப்பிற்கு விண்ணப்பித்துள்ளவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

குறிப்பு: 1. நேர்காணலில் கலந்து கொள்ள வருபவர்கள் தங்களது வயது சான்றிதழ் கட்டாயம் கொண்டுவரவும்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### தளபதி முருகேசன் தலைமை! டி.மருதராஜ் முன்னிலை! இரா.நவநீதகிருஷ்ணன் வரவேற்புரை!

# பொள்ளாச்சி நகர தி.மு.க. சார்பில் திராவிடத்தால் வாழ்ந்தோம் கருத்தரங்கம்!

## மு.கண்ணப்பன் - கு.சண்முகசுந்தரம் - டாக்டர் ஆர்.மகேந்திரன் பங்கேற்பு!

கோவை, அக். 6-

கோவை தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி நகர தி.மு.க. திராவிடத்தால் வாழ்ந்தோம் எனும் தலைப்பில் திறந்த வெளி கருத்தரங்கம் இன்று (6.10.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, அறிஞர் அண்ணா திடல், காமராஜர் ரோடு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சியில் நடைபெறுகிறது.

சி.செந்தில்வேல், புதுகை பூபாலன் ஆகியோர் கருத்துரையாற்றுகின்றனர்.

கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமை வகிக்கிறார்.

மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் டி. மருதராஜ் முன்னிலை வகிக்கிறார்.

பொள்ளாச்சி நகர செயலாளர் இரா.நவநீதகிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இதில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், கு. சண்முகசுந்தரம் எம்.பி, கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர் ஆர்.மகேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

---

### நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் ஒவ்வொரு கிராமங்களிலும்

# கிளைகள் தோறும், இல்லந்தோறும் தி.மு.க. இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி அறிவிப்பு!

நாமக்கல், அக். 6 -

நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் ஒவ்வொருகிராமங்களிலும் கிளைகள் தோறும், இல்லந்தோறும் தி.மு.க. இளைஞர்அணிஉறுப்பினர் சேர்க்கை முகாம் நடத்த வேண்டும் என நாமக்கல் கிழக்குமாவட்டஇளைஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி அறிவித்துள்ளார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் நாமக்கல்நளாஹோட்டலில் நடைபெற்றது. மாவட்ட இளைஞரணிஅமைப்பாளர் சி.விஸ்வநாத்வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்பரர் வ.இளம்பரிதி எம். கார்த்திக், ரமேஷ், பிரபாகரன், கலைவாணன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் பா.கிருபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு தலைமை தாங்கி கூட்டப்பொருள் குறித்து விளக்கமளித்தார்.

கூட்டத்தில், நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் ஒவ்வொரு கிராமங்களிலும் கிளைகள் தோறும், இல்லந்தோறும் தி.மு.க. இளைஞர் அணி உறுப்பினர்சேர்க்கைமுகாம் அமைத்து நடத்தப்பட வேண்டும்,

வரும் 10 தேதி நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் காலை 9 மணிக்கு ஒன்றிய, நகர, பேரூர்களில் இளைஞர் அணி உறுப்பினர்கள் நேர்காணல் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் மாநிலஇளைஞரணிதுணை செயலாளர்கள்நேர்காணல் நடத்தஉள்ளார்கள்.எனவே ஒன்றிய,பேரூர்களில்இளைஞர் அணியில் பணியாற்ற விண்ணப்பித்தஅனைவரும் அவசியம் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்,

மாநில இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் வருகை குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

வரும் டிசம்பர் மாதம் 27 ந் தேதி சேலத்தில் நடைபெறும்மாநிலஇளைஞரணி மாநாட்டிற்கான அழைப்பிதழாக நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட ஒருங்கிணைந்த இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளது. இதில் நாமக்கல் கிழக்குமாவட்டம்சார்பாக சுமார் 15,000 இளைஞர்கள் பங்கு பெற வேண்டும். டிசம்பர் மாதம் நடைபெற உள்ள மாநில இளைஞர் அணி மாநாட்டிற்கு நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய நகர பேரூர்களில் இளைஞர் அணியினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில்ஒன்றியநகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள் ஆகியோர்கலந்துகொண்டனர். இறுதியாக மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்பரர் வ. இளம்பரிதி நன்றி கூறினார்.



நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.4.70 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 8 குழாய் சுத்திகரிப்பு இயந்திரங்களின் செயல்பாட்டினை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் ராஜா, மோகனூர் ஒன்றிய கழகச் செயலாளர் பெ.நவலடி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.